**மழைநீரை சேமிப்போம் !** **பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம் !!**

நகராட்சி அலுவலகம்,
தேனி-அல்லிநகரம்.

நாள். 07.12.2018

# நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை மாதம் 21ஆம் நாள் **07.12.2018 வெள்ளிக்கிழமை** காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற **அவசரக் கூட்டம்** நடைபெறும்.

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி

## பொருள் 01:

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜ் பேருந்து நிலையத்தில் உள்ள வைரம் லாட்ஜ் அருகில் உள்ள காலியிடத்தில் (5 x8 ½ சதுர அடி) நாள் 20.11.2018-ம் தேதியன்று நடைபெற்ற பொது ஏல ஒப்பந்தப்புள்ளியில் கலந்த கொண்டவர்களின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஏலக்கேள்வித்தொகை |
|---|---|---|---|
| 1. | திரு. P.அஜய்,<br>த/பெ.பார்த்திபன்,<br>சுண்ணாம்பு காளவாசல் தெரு,<br>பங்களாமேடு,<br>தேனி. | ரூ.950/- | -- |
| 2. | திரு. A.C.ஆண்டிச்சாமி,<br>க/பெ.சின்னமாயன்,<br>47, பங்களாமேடு 1-வது தெரு,<br>தேனி. | ரூ.975/- | -- |

**அலுவலக குறிப்பு:-**

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் திரு. A.C.ஆண்டிச்சாமி என்பவர் கோரிய உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.975/- ஐ மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2806 / 2018/அ3)

**தீர்மான எண். 757 அ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 02:

தேனி – அல்லிநகரம் நகராட்சி குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாநில அளவிலான தமிழ் நாளிழதலில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | Bright Advertising, சென்னை (நமது அம்மா) | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி. வெளியீட்டு ஆணை எண்: 977/ ஒப்ந்தப்புள்ளி / விளம்பரம் / 2018 நாள்: 20-09-2018. | ரூ: 90,720/- |
| | | **மொத்தம்** | **ரூ: 90,720/-** |

மேற்கண்ட தொகை ரூ:90,720/- (ரூபாய்: தொன்னூறு ஆயிரத்து எழுநூற்று இருபது மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3524 / 2018/அ3)

**<u>தீர்மான எண். 758 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் 03:

தேனி-அல்லிநகரம் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 08.01.2011-ல் பணியிடை காலமான திரு.எஸ்.ராமச்சந்திரன் என்பவரது மகன் திரு.ஆர்.அருள்பாண்டியன் என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணி வழங்கிட கோரி சென்னை, உயர்நிதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(MD) No.22754/2018 தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக திரு.கே.ஹேம கார்த்திகேயன், உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ஆஜராகிடவும் மற்றும் வழக்கு தொடர்பான செலவினங்களுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3662 / 2018 /சி1)

**<u>தீர்மான எண். 759 1, 2. அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் 04:

தேனி – அல்லிநகரம் நகராட்சி குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவிலான தமிழ் நாளிழதலில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | தமிழக நியூஸ், திருச்சி | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி. வெளியீட்டு ஆணை எண்: 1000/ ஒப்ந்தப்புள்ளி / விளம்பரம் / 2018 நாள்: 27-11-2018. | ரூ: 41,040/- |
| | | **மொத்தம்** | **ரூ: 41,040/-** |

மேற்கண்ட தொகை ரூ:41,040/- (ரூபாய்: நாற்பத்து ஒன்று ஆயிரத்து நாற்பது மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3524 / 2018 /அ3)

**தீர்மான எண்.760 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 05:

2018-2019-ம் ஆண்டு பொது நிதியின் கீழ் தேனி-அல்லிநகர நகராட்சியில் 33 வார்டுகளில் உள்ள தெரு மின் விளக்கு தனியார் மூலம் மேற்கொள்ளும் பணிக்கு 27.11.2018-ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் மாநில அளவில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப் பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமத விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1. | Ravi Publicity Service (Trenty Mirror Tamilnadu மற்றும் மக்கள் குரல்) | தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, சென்னை வெளியீட்டு ஆணை எண்.4571/ ஒப்பந்தப்புள்ளி / விளம்பரம் / 2018 நாள் 30.12.2017. | ரூ.70,875/- |
| | | மொத்தம் | ரூ.70,875/- |

மேற்கண்ட தொகை ரூ.70,875/- (ரூபாய் எழுபதினாயிரத்து எண்ணூற்றி எழுபத்தி ஐந்த மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1208 / 2017 /இ2)

**தீர்மான எண்.761 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 06:

தேனி–அல்லிநகரம் நகராட்சிக்கு உட்பட்ட 33 வார்டு பதிகளில் மழைக்காலத்தில் தேங்கும் தண்ணீரை உறிஞ்சி வெளியேற்ற டீசல் எஞ்சின் பி. வி. சி டேங்க் மற்றும் ஒஸ் சப்ளை செய்தல் பணிக்கு **12.10.2018** ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுல் / குறைவு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திரு. பி.முருகேசன் | 97930.00 | 0.02% குறைவு |
| 2. | திரு. எம். தமிழ்செழியன் | 99080.00 | 1.15% கூடுதல் |

**அலுவலககுறிப்பு:** அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு. பி. முருகேசன் நகாட்சி ஒப்பந் தேனி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி தனி அலவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1982/ 2018 /இ2)

**தீர்மான எண். 762 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 07:

தேனி-அல்லிநகரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட அல்லிநகரம் கிராமம் நகரளவை வார்டு-F, பிளாக்-6, T.S.No.5/2-ல் கட்டுப்பட்டுள்ள இடத்தில் 0.1892 சதுர மீட்டர் இடத்தில் உணவு பாதுகாப்பு அலுவலகம் அமைப்பதற்கு நில மாற்றம் செய்து வழங்குவது தொடர்பாக நகராட்சி மூலம் ஆட்சேபணையில்லா தீர்மானம் கோரி வட்டாட்சியர், தேனி அவர்களின் கடிதம் ந.க.எண். 3519/2018/அ6, நாள்.29.11.2018 இவ்வலுவலகம் வரப்பெற்றுள்ளது.

மேற்படி இடம் நகர் ஊரமைப்பு துறையின் மூலம் இணக்கமளிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் IX-ல்அமைகிறது. மேற்படி இடம் நகரளவு ஆவணங்களின்படி சர்க்கார் புஞ்சை தரிசு நிலம் என வகைபாடு செய்யப்பட்டுள்ள இடமாகும். மேற்படி இடம் நகராட்சியின் பராமரிப்பிலுள்ள தார்ச்சாலையினை அணுகு சாலையாகக் கொண்டது. எனவே மேற்படி இடத்தில் உணவு பாதுகாப்பு அலுவலகம் அமைக்க ஆட்சேபணையில்லை என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு .**

அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.3582/2018/எப்1)

**தீர்மான எண். 763 அ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 08:

தேனி-அல்லிநகரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட அல்லிநகரம் கிராமம் பழைய புல எண் 2299, வார்டு-F, பிளாக்-6, T.S.No.5/6-ல் கட்டுப்பட்டுள்ள இடத்தில் 0.812 சதுர மீட்டர் இடத்தில் தேனி போக்குவரத்து காவல் நிலையம் அமைப்பதற்கு நில மாற்றம் செய்து வழங்குவது தொடர்பாக நகராட்சி மூலம் ஆட்சேபணையில்லா தீர்மானம் கோரி வட்டாட்சியர், தேனி அவர்களின் கடிதம் ந.க.எண்.3581/2018/அ6, நாள். 29.11.2018 இவ்வலுவலகம் வரப்பெற்றுள்ளது.

மேற்படி இடம் நகர் ஊரமைப்பு துறையின் மூலம் இணக்கமளிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் IX-ல் அமைகிறது. மேற்படி இடம் நகரளவு ஆவணங்களின்படி சர்க்கார் புஞ்சை தரிசு நிலம் என வகைபாடு செய்யப்பட்டுள்ள இடமாகும். மேற்படி இடம் நகராட்சியின் பராமரிப்பிலுள்ள தென்வடல் திட்டச்சாலையினை அணுகு சாலையாகக் கொண்டது. மேற்படி சாலையில் நகராட்சியின் மூலம் தார்ச்சாலையாக அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்படுத்தும் பொதுச் சாலையாகும். எனவே மேற்படி இடத்தில் போக்குவரத்து காவல் நிலையம் அமைக்க ஆட்சேபணையில்லா சான்று வழங்குவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.3582/2018/எப்1)

**தீர்மான எண். 764 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 09:

தேனி – அல்லிநகரம் நகராட்சி கிழக்கு சந்தை மற்றும் மேற்குச் சந்தையில் நகராட்சி கீழ்கண்டவாறு கடைகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| வ. எண். | இடம் | கடைகள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கிழக்கு சந்தை கட்டண கழிப்பறை அருகில் உள்ள காலியிடம் | 16 கடைகள் |
| 2 | மேற்கு சந்தை MUDF ஸ்டால் அருகில் உள்ள காலியிடம் | 7 கடைகள் |

மேற்கண்ட கடைகளுக்கு முன்பொது ஏலம் மூலம் கடைகளுக்கு தலா ரூ:4.00 லட்சம் வீதம் முன்வைப்புத் தொகை வசூல் செய்திட அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், அவர்களின் கடிதம் ந.க.எண்: 5710/2018/அ2 நாள்: 27-11-2018 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:

அ) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ஆ) மேற்கண்டவாறு கடைகளுக்கு ரூ:4.00 லட்சம் முன்வைப்புத் தொகை வசூல் செய்து முன்பொது ஏலம் நடத்திட நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 765 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 10</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் அடித்தளப்பகுதி செகண்டரி பிளாக்கில் அமைந்துள்ள கடை எண்:35 குத்தகை விடுவதற்கு 06-12-2018 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச பொது ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | திரு.P.நவீன்குமார், த/பெ.K.பழனிக்குமார், 15/5A 1வது தெரு, பாரஸ்ட் ரோடு, தேனி. | பொது ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை | ரூ:4,000/- |
| 2 | திரு.P.கிஷோர் குமார், த/பெ.K.பழனிக்குமார், 15/5A 1வது தெரு, பாரஸ்ட் ரோடு, தேனி. | பொது ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை | ரூ:3,500/- |

<u>அலுவலக குறிப்பு</u>:-

அ) மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண்:1-ல் கண்ட நபர் உச்ச கேள்வியாக ரூ:4,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். மேற்கண்ட கடை அமைந்துள்ள பகுதி புதிய பேருந்து நிலையம் தரைத்தள பகுதியாகும் (நகரப் பேருந்து நிறுத்துமிடம்) கடை எண்: 20 முதல் 42 முய உள்ள கடைகளில் பெரும்பான்மையான கடைகள் தொடர்ந்து வாடகை செலுத்த இயலாமல் நகராட்சி வசம் ஒப்படைத்து விட்டனர். காரணம் அப்பகுதியில் பயனிகள் வருகை குறைந்து உள்ளதால் வியாபாரம் சரிவர நடக்காமல் நஷ்டம் ஏற்பட்டு விட்டதால் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனால் $1^1/_2$ வருடங்களுக்கு மேலாக காலியாகவும், 15 அழைப்புகளுக்கு மேல் பொது ஏலம் கோரப்படவில்லை. மேற்கண்ட கடைகள் மாத வாடகை ரூ:9,833/- ஏலக்கேள்வி கேட்கப்பட்டும் தொடர்ந்து வாடகை செலுத்தாமல் நகராட்சியால் கையகப்படுத்தப்பட்டது. எனவே நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பினை சரிசெய்யும் விதமாக மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளயினை அனுமதிக்க மன்ற அனுமதிக வேண்டப்படுகிறது. (ந.க.எண்.5647/ 2018 /அ3)

**<u>தீர்மான எண். 766 அ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் 11:

தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் அடித்தளப்பகுதி செகண்டரி பிளாக்கில் அமைந்துள்ள கடை எண்:37 குத்தகை விடுவதற்கு 06-12-2018 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச பொது ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | திரு.T.K.சாணக்யா,<br>த/பெ.T.கிருஷ்ணகுமார்,<br>கே.எம்.ஜி. பிளாட்,<br>பழனிச்செட்டிபட்டி. | ரூ:3,625/- | ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளவில்லை |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்கண்ட கடைக்கு சுமார் 15 அழைப்புகளுக்கு மேல் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் இதுநாள் வரை யாரும் ஏலம் கோர முன் வரவில்லை. ஏற்கனவே மாத வாடகை ரூ:8,700/-க்கு ஏலக்கேள்வி கோரப்பட்டு தொடர்ந்து வாடகை செலுத்த இயலாததாலும், மேற்கண்ட பகுதியில் பயணிகள் வருகை மிகவும் குறைந்துள்ளதால் ஆட்கள் நடமாட்டம் இல்லாது வியாபாரம் சரியாக இல்லாததால் கடையினை நகராட்சி வசம் ஒப்படைத்து விட்டனர். $1^1/_2$ ஆண்டுகளுக்கு மேலாக காலியாக இருப்பதால் நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பினை சரிசெய்யவும், மேலும் தற்போது அருகாமையில் உள்ள கடைகளுக்கு மாத வாடகை உச்ச கேள்வியாக ரூ:3,600/-க்கு மிகாமல் போகாததாலும் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.5647/ 2018 /அ3)

**<u>தீர்மான எண். 767 அ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் 12:

தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் அடித்தளப்பகுதி செகண்டரி பிளாக்கில் அமைந்துள்ள கடை எண்:38 குத்தகை விடுவதற்கு 06-12-2018 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச பொது ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | திரு.S.அர்ஜீன்குமார்,<br>K.R.R. நகர்,தேனி. | ரூ:3,700/- | ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளவில்லை |

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) மேற்கண்ட கடைக்கு மாத வாடகை ரூ:10,120/-க்கு உச்ச கேள்வி கோரப்பட்டு பின்னர் வாடகை செலுத்த இயலாமல் கடையினை நகராட்சியால் கையகப்படுத்தப்பட்டது. புதிய பேருந்து நிலையம் அடித்தளப்பகுதி (நகர பேருந்துகள் நிறுத்துமிடம்) ஒட்டியுள்ள பகுதிகளில் பயணிகள் வருகை மிகவும் குறைந்துள்ளதாலும், அதனால் வியாபாரம் பாதிப்படைந்துள்ளதால் அப்பகுதியில் உள்ள கடைகள் எண்: 20 மதல் 42 வரை உள்ள பெரும்பாளான கடைகள் தொடரந்து வாடகை செலுத்த இயலாமல் நகராட்சி வசம் கடையினை ஒப்படைத்து விட்டனர். பின்னர் 15 அழைப்புக்கு மேல் ஒப்பந்தப்புள்ளி / பொது ஏலம் கோரியும் கடந்த $1^1/_2$ வருடங்களுக்கு மேல் காலியாக இருந்து வந்தது. நகராட்சி நிதியிழப்பினை சரிசெய்யும் விதமாக மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.5647/ 2018 /அ3)

**<u>தீர்மான எண். 768 அ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 13</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் அடித்தளப்பகுதி செகண்டரி பிளாக்கில் அமைந்துள்ள கடை எண்:39 குத்தகை விடுவதற்கு 06-12-2018 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச பொது ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | திரு.தீபன்,<br>த/பெ. V.P.பன்னீர்செல்வம்,<br>வடக்கு ஜெகநாதபுரம்,<br>காமாட்சியம்மன் கோவில் தெரு,<br>பி.சி.பட்டி. | ரூ:3,650/- | ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளவில்லை |
| 2 | திரு.C.ஆண்டிச்சாமி,<br>த/பெ. சின்னமாயன்,<br>பங்களாமேடு முதல் தெரு,<br>தேனி. | ரூ:3,600/- | ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளவில்லை |

<u>அலுவலக குறிப்பு</u> :-

அ) மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்:1-ல் கண்ட நபர் உச்ச கேள்வியாக ரூ:3,650/- கோரியுள்ளார். புதிய பேருந்து நிலையம் தரைத்தளப்பகுதி (நகர பேருந்துகள் நிறுத்துமிடம்) முழுவதும் உள்ள கடைகளில் கடை எண்: 20 மதல் 42 வரை உள்ள கடைகளில் பெரும்பாளான கடைகள் வாடகை செலுத்த இயலாமல் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு, பூட்டப்பட்டு தொடர்ந்து காலியாக உள்ளது.

மேற்கண்ட பகுதியில் பயணிகள் வருகை குறைந்து உள்ளதால், வியாபாரம் சரியாக இல்லாததால் வாடைகை செலுத்த இயலாமல் பெரும்பாண்மையான கடைகள் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடந்த $1^{1}/_{2}$ வருடங்களுக்கு மேலாக 15 அழைப்புகளுக்கு மேல் ஏலம் கோரப்பட்டும் யாரும் ஏலம் கோர முன்வரவில்லை. மேலும் அருகாமையில் உள்ள கடைகள் அதிகபட்சமாக ரூ:3,650/-க்கு மிகாமல் மாத வாடகை உச்ச கேள்வி கோரப்பட்டுள்ளது. எனவே நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பினை சரிசெய்ய மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.5647/ 2018 /அ3)

**தீர்மான எண். 769 அ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 14:

தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் அடித்தளப்பகுதி செகண்டரி பிளாக்கில் அமைந்துள்ள கடை எண்:40 குத்தகை விடுவதற்கு 06-12-2018 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச பொது ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | திரு.தீபன்,<br>த/பெ. V.P.பன்னீர்செல்வம்,<br>வடக்கு ஜெகநாதபுரம்,<br>காமாட்சியம்மன் கோவில் தெரு,<br>பி.சி.பட்டி. | ரூ:3,650/- | ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளவில்லை |
| 2 | திரு.C.ஆண்டிச்சாமி,<br>த/பெ. சின்னமாயன்,<br>பங்களாமேடு முதல் தெரு,<br>தேனி. | ரூ:3,750/- | ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளவில்லை |

**அலுவலக குறிப்பு:-**

அ) மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்:2-ல் கண்ட நபர் உச்ச கேள்வியாக ரூ:3,750/- கோரியுள்ளார். புதிய பேருந்து நிலையம் தரைத்தளப்பகுதி (நகர பேருந்துகள் நிறுத்துமிடம்) முழுவதும் உள்ள கடைகளில் கடை எண்: 20 மதல் 42 வரை உள்ள கடைகளில் பெரும்பாளான கடைகள் வாடகை செலுத்த இயலாமல் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு, பின்னர் கடைகள் பூட்டப்பட்டு தொடர்ந்து காலியாக உள்ளது. காரணம் அப்பகுதி முழுவதும் பயணிகள் வருகை குறைந்து உள்ளதாலும், வியாபாரம் சரிவர நடக்காததால் நஷ்டம் ஏற்பட்டு நகராட்சி வாடகை செலுத்த இயலவில்லை. மேலும் தொடர்ந்து 15 அழைப்புகளுக்கு மேல் ஏலம்

கோரப்பட்டும் யாரும் ஏலம் கோர முன்வரவில்லை. கடந்த $1^1/_2$ வருடங்களுக்கு மேல் காலியாக இருந்து வந்ததாலும், அருகாமையில் உள்ள கடைகளுக்கு ரூ:3,650/-க்கு மிகாமல் ஏலம் கோரப்பட்டதால், நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பினை சரிகட்டும் பொருட்டு மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.5647/ 2018 /அ3)

**தீர்மான எண். 770 அ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 15:

தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் அடித்தளப்பகுதி செகண்டரி பிளாக்கில் அமைந்துள்ள கடை எண்:41 குத்தகை விடுவதற்கு 06-12-2018 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச பொது ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | திரு.A.சின்னகாமன், த/பெ. V.அன்னக்கொடி, 57, சோலைமலை அய்யனார் கோவில் தெரு, பங்களாமேடு, தேனி | பொது ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை | ரூ:3,625/- |
| 2 | திரு.S.நடராஜன், த/பெ. சீனித்தேவர், வள்ளுவர் காலனி, கருவேல்நாயக்கன்பட்டி, தேனி. | பொது ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை | ரூ:3,600/- |

**அலுவலக குறிப்பு:-**

அ) மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்:1-ல் கண்ட நபர் உச்ச கேள்வியாக ரூ:3,625/- கோரியுள்ளார். புதிய பேருந்து நிலையம் தரைத்தளப்பகுதி (நகர பேருந்து நிறுத்துமிடம்) முழுவதும் உள்ள கடைகளில் கடை எண்: 20 முதல் 42 வரை உள்ள கடைகளில் பெரும்பாளான கடைகள் வாடகை செலுத்த இயலாமல் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு, பின்னர் கடைகள் பூட்டப்பட்டு தொடர்ந்து காலியாக உள்ளது. காரணம் அப்பகுதி முழுவதும் பயணிகள் வருகை குறைந்து உள்ளதாலும், வியாபாரம் சரிவர நடக்காததால் நஷ்டம் ஏற்பட்டு நகராட்சி வாடகை செலுத்த இயலவில்லை. மேலும் தொடர்ந்து 15 அழைப்புகளுக்கு மேல் ஏலம் கோரப்பட்டும் யாரும் ஏலம் கோர முன்வரவில்லை. கடந்த $1^1/_2$ வருடங்களுக்கு மேல் காலியாக இருந்து வந்ததாலும், அருகாமையில் உள்ள கடைகளுக்கு ரூ:3,650/-க்கு மிகாமல் ஏலம் கோரப்பட்டதால், நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பினை சரிகட்டும் பொருட்டு மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.5647/ 2018 /அ3)

**தீர்மான எண். 771 அ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 16:

தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் அடித்தளப்பகுதி செகண்டரி பிளாக்கில் அமைந்துள்ள கடை எண்:65 குத்தகை விடுவதற்கு 06-12-2018 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச பொது ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | திருமதி.நிஸ்ரின் பானு, க/பெ.அகமது ரம்ஜான் கனி, பங்களாமேடு, 31வது வார்டு, தேனி | பொது ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை | ரூ:9,100/- |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்கண்ட கடை புதிய பேருந்து நிலையத்தில் தரைத்தள பகுதிக்கு மேல் தரைத்தளம் செல்லும் பாதைக்கு அருகாமையில் உள்ளதால் அப்பகுதியில் வியாபாரம் இல்லாததால் வியாபாரம் ஆகாமல் நஷ்டப்பட்டு ஏற்கனவே அக்கடையினை மாத வாடகை ரூ:13,973/-க்கு உச்ச கேள்வியாக கேட்டு ஏலம் எடுத்திருந்த நபர் நகராட்சிக்கு வாடகை செலுத்த இயலாமல் கடையினை நகராட்சி வசம் ஒப்படைத்து விட்டு சென்றுவிட்டார். மேற்கண்ட கடைக்கு அருகிலே தரைத்தளம் செல்லும் படிக்கட்டு அமைந்துள்ளதால் இக்கடைக்கு பொது மக்கள் வந்து செல்வது மிகவும் இடையூராக உள்ளது. எனவே நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பினை சரிசெய்யும் பொருட்டு மேற்கண்ட உச்ச கேள்வியை அனுமதிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.5647/ 2018 /அ3)

**தீர்மான எண். 772 அ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 17:

தேனி - அல்லிநகரம் நகராட்சி காமராஜர் பேருந்து முனையம் கிழக்கு பக்க கடை எண்: 22 குத்தகை விடுவதற்கு 06-12-2018 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச பொது ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | திரு.ப.பிரதீஸ் குமார், கோடாங்கிபட்டி, திருச்செந்தூர், தேனி. | பொது ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை | ரூ:2,500/- |

அலுவலக குறிப்பு :-

அ) மேற்கண்ட கடைக்கு திரு.ப.பிரதீஸ் குமார் என்பவர் ரூ:2,500/-க்கு மாத வாடகையாக கோரியுள்ளார். மேற்படி கடைக்கு பலமுறை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேலும் கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் துவங்கப்பட்டுள்ளதால் காமராஜர் பேருந்து முனையத்தில் பொது மக்கள் வருகை குறைவாக உள்ளது. மேலும் நகராட்சி கடைகள் பல மாதங்களாக பூட்டி உள்ளது நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. எனவே நகராட்சிக்கு தொடர்ந்து நிதியிழப்பு ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.5647/ 2018 /அ3)

**தீர்மான எண். 773 இ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 18:

தேனி - அல்லிநகரம் நகராட்சி காமராஜர் பேருந்து முனையம் கிழக்கு பக்க கடை எண்: 23 குத்தகை விடுவதற்கு 06-12-2018 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச பொது ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | திரு.R.ராஜா,<br>கோடாங்கிபட்டி,<br>திருச்செந்தூர்,<br>தேனி. | பொது ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை | ரூ:2,500/- |

அலுவலக குறிப்பு :-

அ) மேற்கண்ட கடைக்கு திரு.R.ராஜா என்பவர் ரூ:2,500/-க்கு மாத வாடகையாக கோரியுள்ளார். மேற்படி கடைக்கு பலமுறை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேலும் கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் துவங்கப்பட்டுள்ளதால் காமராஜர் பேருந்து முனையத்தில் பொது மக்கள் வருகை குறைவாக உள்ளது. மேலும் நகராட்சி கடைகள் பல மாதங்களாக பூட்டி உள்ளது நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. எனவே நகராட்சிக்கு தொடர்ந்து நிதியிழப்பு ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.5647/ 2018 /அ3)

**தீர்மான எண். 774 அ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 19:

தேனி - அல்லிநகரம் நகராட்சி காமராஜர் பேருந்து முனைய கிழக்கு பக்க தரைத்தள பகுதி கடை எண்: 19A குத்தகை விடுவதற்கு 06-12-2018 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச பொது ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | திருமதி.S.நிரஞ்சனா, க/பெ.I.V.சரவணபிரேம், 8 ஜெய்ராம் நகர், பி.சி.பட்டி, தேனி. | பொது ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை | ரூ:3,300/- |

அலுவலக குறிப்பு:-

அ) மேற்கண்ட கடைக்கு திருமதி.S.நிரஞ்சனா என்பவர் ரூ:3,300/-க்கு மாத வாடைகையாக கோரியுள்ளார். மேற்படி கடைக்கு பலமுறை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேலும் கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் துவங்கப்பட்டுள்ளதால் காமராஜர் பேருந்து முனையத்தில் பொது மக்கள் வருகை குறைவாக உள்ளது. மேலும் நகராட்சி கடைகள் பல மாதங்களாக பூட்டி உள்ளது நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. எனவே நகராட்சிக்கு தொடர்ந்து நிதியிழப்பு ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.5647/2018/அ3)

**தீர்மான எண். 775 அ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 20:

தேனி - அல்லிநகரம் நகராட்சி காமராஜர் பேருந்து முனையம் தங்கும் விடுதி கீழ் உள்ள கடை எண்: 5 குத்தகை விடுவதற்கு 06-12-2018 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச பொது ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | திரு.A.கணேசன், 99/140 பழைய டி.வி.எஸ். ரோடு,தேனி. | பொது ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை | ரூ:7,600/- |
| 2 | திரு.V.சரவணன், 14 சொக்கர் தெரு,தேனி. | பொது ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை | ரூ:6,000/- |

அலுவலக குறிப்பு :-

அ) மேற்கண்ட கடைக்கு திரு.A.கணேசன் என்பவர் ரூ:7,600/-க்கு மாத வாடைகையாக கோரியுள்ளார். மேற்படி கடைக்கு பலமுறை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேலும் கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் துவங்கப்பட்டுள்ளதால் காமராஜர் பேருந்து முனையத்தில் பொது மக்கள் வருகை குறைவாக உள்ளது. மேலும் நகராட்சி கடைகள் பல மாதங்களாக பூட்டி உள்ளது நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. எனவே நகராட்சிக்கு தொடர்ந்து நிதியிழப்பு ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.5647/2018/அ3)

**தீர்மான எண். 776 அ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 21:

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் மற்றும் காமராஜர் பேருந்து முனையத்தில் அவ்வப்போது ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டு நகராட்சியால் அகற்றப்பட்டு வருகிறது. எதிர்வரும் காலங்களில் ஆக்கிரமிப்பு ஏற்படாமல் தடுக்கவும், நகராட்சி நிதி வருவாயினை பெருக்கும் பொருட்டும், பொது மக்களுக்கு இடையூறு இல்லாமல் தடுக்கவும், மேலும் மேற்கு பகுதியில் கால்நடை மருத்துவமணைக்கு பயன்படுத்தப்பட்ட கட்டடம், தற்போது பயன்பத்தப்படாமல் பூட்டிய நிலையில் உள்ளதை நகராட்சி நிதி வருவாயினை பெருக்கும் பொருட்டும் மேற்கண்ட இனங்களுக்கு மாத வாடகை அடிப்படையில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | இனம் | அளவு | ஒப்பந்தப்புள்ளி பொறுப்புத் தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் மெயின் பிளாக் தெற்கு பகுதி கடை எண்: 8 முன்புறம் உள்ள காலியிடம் | 10 X 10 = 100 சதுர அடி | 1,40,000/- |
| 2 | காமராஜர் பேருந்து முனையம் தங்கும் விடுதி செல்லும் பாதை எதிரில் உள்ள காலியிடம் | 11 X 8 = 88 சதுர அடி | 1,50,000/- |
| 3 | மேற்கு சந்தை கால்நடை மருத்துவமணைக்கு பயன்படுத்தப்பட்ட கட்டடம் | 20 X 10 = 200 சதுர அடி | 3,00,000/- |

### அலுவலக குறிப்பு:

அ) மேற்கண்ட இனங்களுக்கு மாத வாடகை அடிப்படையில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட இனங்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி பொறுப்புத் தொகைக்கு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5647/2018/அ3)

**தீர்மான எண். 777 அ, ஆ. றந அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 22:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் பகுதியில் 107.162 கி.மீ. சாலை நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகரில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்திடும் பொருட்டு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் - III 2010-11-ல் ரூ:42.09 கோடி மதிப்பீட்டில் திட்டம் ஒப்புதல் வழங்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 59.333 கி.மீ.

நீளத்திற்கு கழிவுநீர் பிரதான குழாய்கள் பதிக்கப்பட்டது, மேலும் 2,709 கழிவுநீர் ஆய்வு தொட்டிகள் அமைக்கப்பட்டு 08-06-2015 முதல் பயன்பாட்டில் உள்ளது. மேற்கண்ட பணிக்கான திட்ட மதிப்பீடு தயார் செய்கையில் குடியிருப்பு இல்லாத இதே பகுதிகளில் விடுபட்டு பாதாள சாக்கடை குழாய்கள் பதிக்கப்படாமல் உள்ளது. தற்போது மேற்கண்ட பகுதிகளில் குடியிருப்பு உருவாகி உள்ளதால் நகரின் பொது சுகாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில், பாதாள சாக்கடை திட்டத்தினை முழுமையான செயல்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு பாதாள சாக்கடை திட்டம் செயல்பாட்டில் உள்ள பகுதியில் விடுபட்ட சிறு தெருக்களில் சுமார் 20.570 கி.மீ. நீளத்திற்கு பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் 685 கழிவுநீர் ஆய்வு தொட்டிகள் அமைப்பது இன்றியமையானதாக உள்ளது. இந்த சிறு தெருக்கள் அனைத்தும் அருகில் செல்லும் பிரதான கழிவுநீர் கடத்தும் குழாய்களுக்கு சுலபமாக அனுகக் கூடிய இடங்களாக உள்ளது.

எனவே தேனி – அல்லிநகரம் நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்பாட்டில் உள்ள பகுதியில் உள்ள விடுபட்ட தெருக்களில் பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் கழிவுநீர் ஆய்வு தொட்டிகள் அமைக்கும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள திட்ட மதிப்பீடு ரூ: 270.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:

அ) நகரில் பாதாள சாக்டை திட்டத்தினை முழுமையான செயல்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டும் நகரின் பொது சுகாதாரத்தினை மேம்படுத்திடும் பொருட்டும் தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை அரசு நிர்ணயிக்கும் நிதிப்பகிர்வில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட மதிப்பீட்டு தொகைக்கு நிதி ஒதுக்கீடு செய்திடும் பொருட்டு அரசுக்கு பிரேனை அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3354/2017/இ3)

**<u>தீர்மான எண். 778 அ, ஆ, இ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 23</u>:

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டுகளில் வார்டு எண்.1 முதல் 33 வரை முடியஉள்ள வார்டுகளில் உள்ள கீழ்கண்ட தெருக்கள் மற்றும் மண்டலம் மாவட்ட அரசிதழில் விடுதலாகியுள்ளது. விடுபட்ட தெருக்களை அரசிதழில் பிற்சேர்க்கையாக கூடுதல் பட்டியலில் சேர்க்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | தெரு பெயர் | மண்டலம் |
|---|---|---|---|
| 1. | 6 | ஹைஸ்கூல் வடக்கு 1 வது குறுக்கு தெரு | B |
| 2 | 6 | ஹைஸ்கூல் வடக்கு 2 வது தெரு | B |
| 3 | 6 | கனகசபாபதி லேஅவுட் | B |
| 4 | 12 | நேருஜி ரோடு குறிஞ்சி நகர் | C |
| 5 | 12 | அம்பேத்கார் நடு தெரு விவிஜி 1 வது தெரு | C |
| 6 | 12 | அம்பேத்கார் நடு தெரு விவிஜி 2 வது தெரு | C |
| 7 | 12 | அம்பேத்கார் நடு தெரு விவிஜி 3 வது தெரு | C |
| 8 | 17 | போஸ்ட் ஆபிஸ் ஒடை 1 வது குறுக்கு தெரு | B |

**அலுவலக குறிப்பு:–**

மேற்கண்ட விடுபட்ட தெருக்கள் மற்றும் அதனை குறிக்கும் மண்டலங்களை பிற்சேர்க்கையாக அரசிதழில் கூடுதல் பட்டியலில் சேர்க்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2567/2018/அ1)

**தீர்மான எண். 779 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 24:

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து முனையத்தில் செயல்பட்டு வரும் கவிதா ரெஸ்டாரண்ட் வரிவிதிப்பு எண்: 125/2005056 மாத வாடகை ரூ:3,500/- என நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்: 308 நாள்: 07-12-1994-ல் நிர்ணயம் செய்யப்பட்டது. மேலும் உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண்: CRP (NPD) (MD) Nos. 1401 மற்றும் 1402/2004 ஆகிய வழக்கில் மேற்கண்ட அரசாணையின் அடிப்படையில் மாத வாடகை ரூ:3,500/- என நிர்ணயம் செய்திட உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 1986 – அக்டோபர் முதல் 2015-16 மார்ச் மாதம் வரையில் ரூ:24,64,706/- தொகை நிலுவையாக உள்ளது. மேற்கண்ட தொகை சம்பந்தப்பட்ட குத்தகைதாரரால் செலுத்தப்பட்டு கீழ்கண்டவாறு நகராட்சி கணக்கில் உள்ளது.

| வரிவிதிப்பு எண்: **125/2005056** | **குத்தகைதாரர் பெயர் : A.சக்கரவர்த்தி** |
|---|---|
| வரியில்லா இனங்கள் கணக்கில் நேரடியாக ஈடுசெய்யப்பட்ட தொகை | ரூ: 15,09,801/- |
| காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ள தொகை | ரூ: 1,00,000/- |
| வைப்புத் தொகை கணக்கில் உள்ள தொகை | ரூ: 8,54,905/- |
| **மொத்தம்** | **ரூ: 24,64,706/-** |

மேற்கண்டவாறு செலுத்தப்பட்டுள்ள தொகையினை வரிவிதிப்பு எண்: 125/2005056-ல் ஈடுசெய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

அ) அரசாணை மற்றும் நீதிமன்ற உத்தரவினை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ஆ) மேற்கண்ட வரிவிதிப்பு எண்: 125/2005056 குத்தகைதாரரால் நேரடியாக குத்தகை இனத்தில் செலுத்திய தொகை ரூ:15,09,801/- வரிவதிப்பு எண்ணில் ஈடுசெய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

இ) காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ள தொகை ரூ:1,00,000/- நடப்பு வைப்புத் தொகை கணக்கிற்கு மாற்றம் செய்து வரிவதிப்பு எண்ணில் ஈடுசெய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

ஈ) நடப்பு வைப்புத் தொகை கணக்கில் உள்ள தொகை ரூ:8,54,905/- வரிவதிப்பு எண்ணில் ஈடுசெய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 780 அ, ஆ, இ, மற்றும் ஈ. அனுமதிக்கப்பட்டது.**

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி